14.10.2024. தினமணி பக்கம் 7

# உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் குறைதீர் குழுக்கள்

## யுஜிசி

**சென்னை, அக். 13:** உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களில் மாணவர் குறைதீர் குழுக்களை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுஜிசி) செயலர் மனீஷ் ஆர்.ஜோஷி, அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தங்களது கல்வி நிறுவனம் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக, மாணவர் குறைதீர் குழுக்களை ஏற்படுத்த வேண்டும் என்று தில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுகுறித்த அறிவுறுத்தல்கள் கடந்த மாதமே கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன.

அதைப் பின்பற்றி குறைதீர் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அனைத்துக் கல்வி நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து, கல்லூரி நிர்வாகங்கள் தங்களது கல்வி நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள குறைதீர் குழுக்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்துக்கு தெரிவிக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள் அந்த விவரங்களை ஒருங்கிணைத்து யுஜிசிக்கு அனுப்ப வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.